# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

**புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் மேயில் சுருக்கமடைந்தன**


**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் பாதகமான தாக்கங்களின் காரணமாக தயாரிப்பு நடவடிக்கைகள் மே காலப்பகுதியில் சுருக்கமடைந்தன.** தயாரித்தல் முகாமையாளர் சுட்டெண்ணானது உற்பத்தி, தொழில்நிலை, புதிய கட்டளைகள் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்களின் குறிப்பிடத்தக்க சுருக்கத்தினால் பிரதானமாகத் தூண்டப்பட்டு முன்னைய மாதத்திலிருந்து 2.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியொன்றுடன் 2021 மேயில் 42.1 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 42.1**

**2021 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2.2 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி**

அறிவித்தலின்றி சமூகமளிக்காதோரின் தொடர்ச்சியான அதிகரிப்பின் பிரதான காரணமாக தொழில்நிலை வீழ்ச்சியுடன் ஒன்றிணைந்து உற்பத்தி, விசேடமாக உணவு மற்றும் குடிபானங்கள், புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறைகளில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இதற்கு மேலாக, மே நடுப்பகுதியில் விதிக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் ஊழியர்கள் கிடைக்கப்பெறும் தன்மையில் குறிப்பிடத்தக்க குறைவின் காரணமாக தமது உற்பத்தித் திட்டங்கள் பெரும்பளவில் இடையூறுக்கு உள்ளாக்கப்பட்டன என இத்துறையைச் சார்ந்த பல பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர்.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | ஏப் | மே | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **44.3** | **42.1** | **-** | **சுருக்கமடைகின்றது உயர்வான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 44.3 | 42.4 | - | சுருக்கமடைகின்றது உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 33.0 | 27.9 | - | சுருக்கமடைகின்றது உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 44.9 | 38.4 | - | சுருக்கமடைகின்றது உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 40.9 | 36.0 | - | சுருக்கமடைகின்றது உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 64.8 | 73.8 | + | நீட்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பருவகால கேள்வி முடிவு மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றின் மீளெழுச்சி என்பவற்றுடன் புதிய கட்டளைகளும் விசேடமாக உணவு மற்றும் குடிபானத் துறை தயாரிப்பில் உள்ளவை மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. இவ்வபிவிருத்திகளுக்கும் மூலப்பொருட்களின் திரண்ட கையிருப்புகளின் சீர்குலைவுகளுக்கும் இசைவாக கொள்வனவுகளின் இருப்பு சுருக்கமடைந்தது.

நிரம்பலர் விநியோக நேரம், 2021 மேயில் உயர்வான வேகத்தில் மேலும் நீட்சியடைந்தது, இதற்கு, இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள் முக்கிய காரணமாக அமைந்தன. மேலும், உயர்வடைந்த கப்பற்செலவுகள், இறக்குமதிசெய்யப்பட்ட மூலப்பொருட்களிற்கான செலவினை அதிகரித்து இலாப எல்லைகளை மோசமாகப் பாதித்தன என பல பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.

கொவிட்-19 தடுப்பு மருந்து நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகள் மூலம் உலகளாவிய நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்தல் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு வரவிருக்கும் மாதங்களில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலையடையும் என்ற சாதகமான எதிர்பார்க்கையுடன் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் துணைச் சுட்டெண் அதிகரித்தது.

***உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

_லகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2021 ்பிறலிருந்து 0.2 சுட்டெண் புள்ளிகளைக் காண்ட அதிகரிப்புடன் 2021 மேயில் 56.0 னைக் கொண்ட பெறுமதியொன்றினைப் திவுசெய்தது.

ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய வலயம் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு 2021 மேயில் உயர்வான வீதங்களில் அதிகரித்த அதேவேளை இந்தியாவின் கொ.மு.சு மெதுவான வேகத்தில் அதிகரித்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2021 யூன் 14இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் அதிகரிப்பிற்கு இசைவாக பணிகள் கொ.மு.சுட்டெண் 2020 ஏப்பிறலிலிருந்து ஆகக்குறைந்த வாசிப்பினைப் பதிவுசெய்து 2021 மேயில் 39.5 இற்கு மேலும் வீழ்ச்சியடைந்து.** புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட சீர்குலைவுகள் இவ்வீழ்ச்சிக்கு துணையளித்தன.

பணிகள் துறையின் புதிய வியாபாரங்கள், அநேகமான துணைத்துறைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளுடன் 2020 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் விரைவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தன. எனினும் மனித சுகாதார நடவடிக்கைகள் துணைத் துறையாது புதிய கொவிட்-19 சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டமையின் மூலம் அதிகரிப்பொன்றினை அவதானித்தது.

பணிகள் துறையின் வியாபார நடவடிக்கைகள், 2021 மேயில் சடுதியான வீழ்ச்சியொன்றினை அவதானித்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அத்தியாவசியமற்றவைகளுக்கான கேள்வியில் வீழ்ச்சி அத்துடன் வியாபாரத் தொழிற்பாடுகளுக்கான இடைத்தடங்கல் காரணமாக அநேகமாக அனைத்து துணைத் துறைகள் முழுவதிலும் வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் அத்துடன் தொழில்சார் பணிகள் ஆகிய துணைத் துறைகள் ஒட்டுமொத்த வியாபார நடவடிக்கைகளின் வீழ்ச்சிக்கு அநேகமாகப் பங்களித்தன. எவ்வாறிருப்பினும், மனித சுகாதார நடவடிக்கைகளில் உள்ள வியாபார நடவடிக்கைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப செய்நிரலாக்கல் ஆலோசனை அத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் துணைத் துறைகள் முன்னைய மாதத்தைப் போன்று அதே மட்டத்தில் காணப்பட்டன.

2021 மேயில் புதிய ஆட்சேர்ப்புக்கள் நிகழாமைக்கு மத்தியில் ஓய்வுபெறுதல், பதவிவிலகல்கள் மற்றும் ஒப்பந்தம் முடிவுறுகின்றமை என்பன காரணமாக தொழில்நிலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.

தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் தொடர்ச்சியான முடக்கல்கள் அத்துடன் மாதத்தின் பிந்திய பகுதியில் தீவு முழுவதுமான பயணக்கட்டுப்பாடுகள் மூலம் நிலுவையிலுள்ள பணிகள் 2021 மேயில் மேலும் அதிகரித்தன.

| மாறி | ஏப் | மே | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **48.9** | **39.5** | **-** | **வீழ்ச்சியடைகின்றது உயர்வான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 48.9 | 36.3 | - | வீழ்ச்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கை | 47.9 | 28.9 | - | வீழ்ச்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 48.4 | 32.8 | - | வீழ்ச்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 54.4 | 60.9 | + | உயர்வடைகின்றது உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 44.7 | 38.6 | - | வீழ்ச்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் நெருக்கடி தீவிரமடைந்தமை மூலம் வளர்ச்சி எதிர்பார்க்கைகள் பற்றி வியாபாரங்களுக்கு மத்தியில் காணப்பட்ட கவலை காரணமாக அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபாபர நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், 2021 மேயில் மேலும் நலிவடைந்தன.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 39.5**

**2021 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 9.4 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




***உலக தோற்றப்பாடு:***
***பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு 2021 ஏப்பிறலின் 57.0 இலிருந்து 2021 மேயில் 59.4 இற்கு அதிகரித்து உலகளாவிய பணி நடவடிக்கைகளில் மேலும் விரிவடைதலினை சமிக்ஞைப்படுத்துகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்ததை எடுத்துக்காட்டிய அதேவேளை, இந்தியா மற்றும் யப்பானின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டின.

*(மூலம்: மார்க்கிட்[1], 2021 யூன் 14இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.